பாரதி நூல்கள் பகுதி ௧௦

வேத ரிஷிகளின் கவிதை

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந் தனவே

இ1
N28
68929

பிரசுராலயம்,
கேணி, சென்னை.

ஹிந்தி பிரசார அச்சியந்திரசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.
1928.

வேத ரிஷிகளின் கவிதை.

முகவுரை.

ஸ்ரீ காசியில் ஹிந்து ஸர்வகலா சங்கத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டிய போது பல வித்வான்கள் வந்து உபந்யாஸம் செய்தார்கள். இவற்றுள்ளே, நவீன சாஸ்திர (ஸயன்ஸ்) பண்டிதர்களின் சிகாமணியாக விளங்கும் ஸ்ரீமான் ஜகதீச சந்திர வசு செய்த உபந்யாஸம் மிகவும் மாண்புடையது.

லௌகிக சாஸ்திர ஆராய்ச்சிகளிலே மறுபடியும் பாரத் தேசம் தலைமை வகிக்கும்படி செய்வது நம்முடைய கடமை யென்பதை இவர் பல வகையிலே விளக்கிய பின்பு தமது முடிவுரையில் பின்வருமாறு சொல்லுகிறார்:—

"ஹிந்து நாகரிகத்திற்குள்ளே ஒரு விசேஷ சக்தியிருக்கிறது. காலத்தின் அழிவுகளையெல்லாம், உலகத்திலேயுள்ள பொருளனைத்தையும் சிதைவுபடுத்த வரும் மாறுதல்களையெல்லாம், இந்த சக்தியினாலே நமது நாகரிகம் எதிர்க்க வல்ல தாயிற்று. (எகிப்து தேசத்தில்) நீல நதிக்கரையிலேயும் அஸ்ஸீரியா தேசத்திலும், பாபிலோனிலும், பல்லாயிர வருஷங்களுக்கு முன்னே, பெரிய பெரிய அறிவுப் பயிற்சிகள் தோன்றி வளர்ந்த

ளுதையும், மாறியதையும், மறைந்ததையும், நமது மஹாத் தான நாகரிகம் பார்த்துக்கொண்டிருந்தது. (அப்போது கூட நமது நாகரிகம் அளவிடமுடியாத பழமை கொண்டதாக விளங்கிற்று). அந்த நாளிலே பாரத மாதா தனக்கு அழிவில்லையென்ற தீராத பக்தியுடன் விளங்கினாள். இன்றும் யௌவனத்தோடிருக்கிறாள். இனி, எதிர் காலத்திலும் அழியமாட்டோமென்கிற தீராத பக்தியிலே உறுதிகொண்டு நிற்கிறாள்."

இங்ஙனம், நவீன சாஸ்திரக் கல்வியாகிய குன்றத்தின் மேலே நெருப்புத் தூணைப்போல ஒளிவீசி நிற்கும் ஸ்ரீமான் வசு கூறிய வார்த்தைகள் வெறுமே உபசாரமல்ல. நம்முடைய இடைக்காலத்து மடமைகளையெல்லாம் மஹிமைகளென்று நினைத்து வீண்பெருமைகொள்வோரின் பேச்சை நாம் உதறிவிடுதல் நியாயம். ஆனால் வசு பண்டிதர் சொல்லியதை. நாம் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளுதல் தகும். இடைக்காலத்திலே நமது ஜாதி பொய்களும் சோர்வுகளும் குவித்த குப்பையின் கீழே அழுந்திக்கிடந்தது. பாரத மாதா நித்திரையி லிருந்தாள் இப்போது மறுபடியும் அந்தக் குப்பையிலிருந்து வெளிப்பட்டு, தைரியமென்னும் கங்காநதியில் ஸ்நானம் செய்துவிட்டு நமது பாரத ஜாதி தனது வானத்திலே தோன்றும் ஸூர்யோதயத்தை அன்புடன் அழைத்து வாழ்த்துக் கூறுகின்றது.

மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பக விருக்ஷத்துக்கு ஆதியிலே விதை யூன்றியவர்கள் வேத ரிஷிகள். அவர்கள் எக்காலத்திலே—எத்தனை நூற்றாண்டுகளின் முன்னே—இருந்தார்களென்பதைக் கணக்கிட்

டுச் சொல்ல நவீன ஆராய்ச்சி யாதொரு கருவியு மில்லாதிருக்கிறது. ஹிமவத் பர்வதம் எப்போ துண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேத ரிஷிகள் எக்காலத்தில் வாழ்ந்தனர்? எப்படிச் சொல்வது?

ரிக்வேதம் பொருள் விளக்கம்.

ரிக்வேதத்திலே ரிஷிகளுடைய கவிதையைப் படிக்கும்போது நம துள்ளத்திலே தேன் பாய்கிறது. அறிவு தெய்வ வெறி கொள்ளுகின்றது. கீழே இந்திரனைப் பற்றிய மந்திரங்கள் சிலவற்றை மொழிபெயர்த்தெழுதுகிறேன். அம்மந்திரப் பொருளை விளக்கும்படியான சில விஷயங்கள் முதலாவது சொல்லுகிறேன்.

"இந்திரன்" என்பது விஞ்ஞான சக்தி; இவனுக்குப் பகை அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்திற்கு "விருத்திரன்" என்று பெயர். (விருத்ரன்—மூடுவோன், மறைப்போன்). விருத்திரன் இருள். அவனே தெய்வ இன்பங்களிலிருந்து நம்மைப் பிரித்து வைக்கும் அஹங்காரம்—அதாவது, பிரிவுணர்ச்சி. அவன் தாய்க்கு தாநு" என்று பெயர், (தாநு—பிரிப்பது).

நமக்குள்ளே மூன்று படிகள் இருக்கின்றன; மண், காற்று, வானம் என. (அதாவது, உடல், உயிர், அறிவு என்ற மூன்றும்) வானத்தின்மேலே உண்மை யுலகம் இருக்கிறது. அந்த உண்மை யுலகத்திலிருந்து நமது அறிவிலே ஞானவொளியின் கிரணங்களும், தேவ—இன்பங்களாகிய நதிகளும் எப்போதும் பாயும்படி செய்ய வேண்டும். இதுவே வேத ரிஷிகளின் நாட்டம்.

அந்த நதிகளையும், கதிர்களையும் நம்முள்ளே பாய வொட்டாதபடி விருத்ராசுரனும் அவன் கூட்டத்தா

ராகிய பணி முதலிய மற்றப் பிசாசுகளும் தடுக்கின்றன. அச்சம், கவலை, சிறுமை, திகைப்பு, சோர்வு—முதலாக நமக்குள்ளே வாழும் அசுரருக்குக் கணக்கில்லை. இவர்களுக்கெல்லாம் தலைவன் விருத்திரன். இவன் மேற் கூறப்பட்ட-தேவநதிகளை மண்மலையின் கீழே உள்ள ஓர் இருட்குகையில் அடக்கிவைத்து அவை தம தறிவிலே பாயாத படி மேலே நின்று தடுக்கிறான்.

இந்த "விருத்ரனை வேதம் பாம்பென்று" சொல்லுகிறது, அஞ்ஞானம் ஒரு விஷப்பூச்சி; அதற்குக் கை கால் கிடையாது; வீரியம் கிடையாது. நெளிந்து நெளிந்து உள்ளே புகுந்து ஒளியையும் இன்பத்தையும் மறைக்கிறது.

இந்திரன முதலிய தேவர்களை யாகத்தினாலே தோழமை கொண்டால், அவர்கள் இந்தப் பாம்பையும் இதன் சேனைகளையும் கொன்று, தேவ-நதிகளை விடுவித்து நம்முள்ளே பாயும்படி செய்து நமக்கு அமரத் தன்மை உண்டாகும்படி செய்கிறார்கள். யாகம்(வேள்வி) என்பது நமது உடல், பொருள், ஆவி, அறிவு, அனைத்தையும் தேவர்களுக்கு அர்ப்பணம் செய்து விடுதல். இந்த வேள்வி செய்தால் நமக்குள் மண், காற்று, வான் (உடல், உயிர், அறிவு) என்ற மூன்று படிகளிலும் தேவர் வந்து நிலைபெற்று அமிர்தபானம் (ஸோமரஸம் குடித்தல்) செய்கிறார்கள். இது மஹரிஷிகளின் யோகானுபவத்திலே கண்டது. இதனை நன்றாகத் தெரிந்து கொண்டால் பின்வரும் மந்திரங்களின் பொருள் தெளிவுபடும்.

ரிக்வேதம்.

(1-32)

இந்திரனை ஹிரண்ய ஸ்தூபன்—
தங்கத்தூண் என்ற ரிஷி பாடியது.

1. இந்திரனுடைய வீரச்செயல்களை இங்கு சொல்லுகின்றேன்.

அவன் வஜ்ரி—மின்னல் அவனுக்குப் படை. அவனுடைய முன்னைத் திறமைகளைச் சொல்லுகிறேன்.

பாம்பைக் கொன்றான்; ஆறுகளைப் பெருகச் செய்தான்.

மலைகளின் சார்புகளை உடைத்தான்.

2. மலையின் மேலே கிடந்த விருத்திரப்பாம்பை அழித்துவிட்டான்.

அறிவினாலே செய்த—வானத்தாலாகிய—வயிரப் படையை இவனுக்கு த்வஷ்டா என்ற தேவன் செய்து கொடுத்தான்.

நதிகள் வானக் கடலை நோக்கிப் பாடிக்கொண்டு விரைந்து சென்றன. இரைந்துகொண்டு செல்லும் ஆவினம் போல.

3. இந்திரன் ஏறு போன்றான், மூன்று படிகளிலே மதுவுண்டான், அந்த மது வேள்வியிலே வடிக்கப் பட்டது.

4. அரவுகளிலே முதல் தோன்றியவனை இந்திரன் கொன்ற பிறகு, மற்ற மாயாவிகளின் மாயைகளை யெல்லாம் வென்றான்.

பின்பு ஸூர்யனையும், வானத்தையும், உஷாதேவியையும் தோன்றுவித்தான். அதன் பிறகு, இந்திரா, உனக்கோர் பகைவனு மில்லை.

5. மறைக்கும் தொழிலே கொண்ட விருத்திரனுக்குத் தோளில்லை. அவனை இந்திரன் பேரிடியாலே கொன்றான்.

பிளந்த விறகுகளைப் போலே விருத்திரன் மண் மீது சிதறி வீழ்ந்தான்.

6. போர்த் தொழி லறியாதவன் விருத்திரன். இவன் நேர்மை நாடு வோனும், மஹா வீரனுமாகிய இந்திரனைப் போருக் கழைத்தான்.

இந்திரனுடைய அம்புத்திறனை இவனால் கடந்து செல்ல முடியவில்லை. சிதறுகின்ற தனது திறமைகளை இந்திர—சத்துரு ஒன்றுசேர்க்க முயன்றான்.

7. காலும் கையு மில்லாதவன் விருத்திரன்.

இந்திரனோடு இவன் போர் செய்ய வந்தான். அவனுடைய வயிரப்படை இவனை மலையின்மீது கொன்றது.

பலவற்றிலே விளங்குவோன் இந்திரன்,

ஆணெறுகளை ஆண்மை போகிய எருதுகள் எதிர்ப்பது போல, அவனை விருத்திரன் பகைத்தான்,

சிதறி வீழ்ந்தான்.

8. ஆற்றடி பிளவுண்டு கிடப்பது போலே விருத்திரன் கிடந்தான்.

இவன் மீது நதிகள் கடந்து சென்றன.

அவை மனதின் மேல் ஏறிச் சென்றன.

முன்னர், அவற்றை விருத்திரன் தனது வலிமையாலே சூழ்ந்து நின்றான்.

இப்போது அவற்றின் அடியிலே வீழ்ந்து கிடக்கிறான்.

ஶ்ரீ

முன்னுரை.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்லுகிறார்:—

"நீங்கள் பிரார்த்தனை செய்யும் போது அது உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்பட வேண்டும். பிறகு சிறிதுகாலம் காத்துக் கொண்டிருந்தால், எனது தாயாகிய ஜகதம்பிகை உங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொடுப்பாள்."

* * * *

நன்று சொல்லினர் ராமகிருஷ்ண முனி. உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்படுகிற வேண்டுதலுக்கு 'மந்திரம்' என்று பெயர். அது பலிக்கும். ஆனால் அங்கிருந்து பிரார்த்தனை கொண்டு வருதல் எளிதன்று. அது பெரிய ஆழம். உள்ளத்தின் அடி! கடலடியை மானுடர் அளந்து பார்த்திருக்கிறார்கள். உள்ளத்தின் அடி காண்பது அதனிலும் பலமடங்கு கஷ்டம். இருந்தாலும் சோர்வு பெற வேண்டா. ஒவ்வொருவனும் உள்ளக் கடலில் இயன்றவரை மூழ்கி அங்கிருந்து பொருள் கொண்டு வரலாம். எத்தனைக் கெத்தனை ஆழத்திலே போகிறாயோ, அத்தனைக் கத்தனை நல்ல முத்து கிடைக்கும்.

ரிஷிகள் உள்ளத்தைத் தெளிவு செய்து கொண்டோர். ஆதலால் அடிவரை எளிதாகப் பாய்ந்து அங்கிருந்து மந்திரங் கொண்டு வந்தனர். அம்மந்திரங்களுக்கு தேவர் வசப்படுவர். வெறும் 'சொல்' லுக்கு மஹிமையில்லை. அச்சொல் உள்ளத் துணிவை உணர்த்துமாயின் அதற்கு மஹிமை யுண்டு. "எதனை நினைக்கிறாயோ அதுவே யாகிறாய்" என்பது தவறாத உண்மை.

நினைப்பு நிஜ நினைப்பாக இருக்கவேண்டும்- ஆழ்ந்த நினைப்பு, அசையாத நினைப்பு, வலிய நினைப்பு, மாறாத நினைப்பு—அவ்வித நினைப்பு விரைவில் உலக மறியத் தக்க வெளியுண்மையாக மாறிவிடும். 'இந்திரன்' எனப் படும் விஞ்ஞான சக்தியை மதுச்சந்த ரிஷி மேற்கூறப் பட்ட படி வலிமை கொண்ட மந்திரங்களால் ஸ்தாப னம் செய்கிறார். அம்மந்திரங்கள் கவிதை யிடையில் திகழ்கின்றன.

* * * *

மொழிபெயர்ப்பு.

(ரிக்வேதம்—முதல் மண்டலம்—ஏழாவது ஸூக்தம் முத லஷ்டகம்—முத லத்யாயம்—பக்கம் 13--14)·

இந்திரனை மதுச் சந்தர் பாடியது.

பாடுவோர் இந்திரனைப் பாடுகின்றனர். மந்திர மோதுவோர் இந்திரனை யோதுகின்றனர். மொழிகள் இந்திரனை வேண்டி எழுகின்றன (1) இந்திரன் இரண்டு குதிரைகளில் (அவை பூட்டிய தேரில்) ஏறுகின்றான். மொழிகள்மீது ஏறுகின்றான்; அவன் இடித்தலைவன்; பொன் வண்ண முடையவன். (2)

நீண்ட காட்சியின் பொருட்டாக இந்திரன் வானத்திலே ஸூர்யனை ஏற்றினான். ஒளிர்க்கதிர்களால் மேகத்தைப் பிளந்தான். (3)

வலிய ஒளிகொண்ட இந்திரா, செழுமைகளிலும், ஆயிர வகைச் செல்வங்களிலும் எம்மை வளர்த்திடுக; நினது வலிய ஒளிகொண்ட வளர்ப்புக்களால். (4)

பெருஞ் செல்வத்திலும், சிறு செல்வத்திலும் இந்

திரனை அழைக்கிறோம்; மறைவு செய்யும் பேய்களின் மீது மின்னற் படைந்தது. (5)

தீ. (1) (அக்நி தேவன்.)

அக்கினி விஷயமாக ரிஷிகள் எழுதியிருக்கும் கவிதையைப் பற்றிப் பேசும்போது ஸ்ரீ அரவிந்த கோஷ் சொல்லுகிறார்:—

"வலியவனாகிச் சுடர் வீசிக்கொண்டு நிற்கும் இந்த தேவனைப் பற்றிய மந்திரங்களிலே கவிதை மிகவும் செழிப்புற்றிருக்கின்றன. சூக்ஷ்மப் பொருள் ஆழ்ந்து நிற்கிறது. தெய்வ வெறி தெளிந்து நிலவுகிறது. பாட்டுக் கொள்ளுகிற அக்கினி தேவனுடைய தழலும், அவன் உறுமுதலும், ஒளியும் பாடுகிற ரிஷிகளின் அறிவிலே தாவிவிட்டன போலும்; அங்கே அவற்றின் களி தழல் கொண்டு எரிகிறது."

ஆம்! உயர்ந்த கவிதையின் நெறியே அது. கவியின் இஷ்ட தேவதை, அல்லது இஷ்ட சித்தி, இஷ்ட தர்மம், இஷ்ட சுகம் இதனுடைய காந்தி அவனுடைய உள்ளத்திலே வீசும். அந்த ஒளி பாட்டிலே தெரியும். உயர்ந்த கவிதையின் நெறி அது. அக்கினி விஷயமாக ரிஷிகள் சொல்லி யிருக்கும் மந்திரங்கள், சித்திரங்கள், காட்சிகள் இவற்றிலே சில இங்கு மொழிபெயர்த்துக் காட்டப்படும்.

(வேத ஸாரம்.)

தீயே, நீ தேவர்களில் முதற் பட்டவன்; முன்னோன்; தலைவன் மறைந்திருக்கும் முதற் கடவுளுடைய வடிவத் தழலை, அதன் வெம்மைகொண்ட வலியை,

அதன் கனலுவது போன்ற திறமையை—அக்நி யென்று வாழ்த்துகிறோம்.

தீ யென்பது ஞான சக்தி.

அவன் வையகத்தின் படிகளை அமைக்கும் பொருட்டு வருகிறான். அவற்றுள்ளே ரஹஸ்ய தேவதையாக வீற்றிருந்து நடைகளையும், செயல்களையும் தூண்டுகிறான்.

எல்லா வகைப்பட்ட செய்கைத் திறமை, உயிர், வலிமை, வடிவழகு, ஒளித்திகழ்ச்சி அறிவு, பொலிவு மாட்சி—இவையனைத்தும் அக்நி—தேவனுடைய விளக்கங்கள்.

அவனுக்குள்ளே ஸத்யம் மோன நிலையிலே நின்று அவனைச் செயல்களிலும் கிளர்ச்சிகளிலும் நடத்துகிறது.

அவன் கை வைத்த பொருளையெல்லாம் பரிசுத்தப்படுத்துகிறான். வையத்திலே தத்தளித்துக் கொண்டிருக்கும் ஜீவனை இருளிலிருந்து ஒளியிலே கொண்டு சேர்க்கிறான்.

வெப்பத்திலும், தொல்லையிலு மிருந்து உபசாந்தியிலும், ஆனந்தத்திலும் கொண்டு நிறுத்துகிறான்.

ஆரம்பத்திலே இவன் உயிர்ப்படியில் எரியத் தொடங்கும்போது இவனை நாலு புறத்திலும் புகை வந்து சூழ்கிறது.

இப்போது அக்நி புகைச்சல் நீங்கி நமது வானங்களிலே தெளிவுபெற எரிகிறான். சுத்த மனம் என்பதோர் ஆகாசத்தைப் பற்றி, ஏறுகிறான்.

இவன் க்ரது—வேள்வித்திறம், செய்கைவலிமை,

துணிவு, தெய்வத்துணிவையே அக்நி யென்கிறோம். இவன் கவி.

அறிவுக் கதிர்களை இவன் காவல் செய்கிறான்.

அந்தக் கதிர்கள், புல்லாந்தரையில் மேயும் பசுக் களைப்போலே, நமது உயிர்நிலத்தில் மேயும்போது, இருளுக்கும் பிரிவுக்கும் மக்களாகிய ராக்ஷஸப் பகை வர் அவற்றைக் கவர்ந்து செல்லாத படி இவன் காக் கிறான்.

பொய் பிழை இவற்றின் கோணல் வழிகளை யெல்லாம் கடந்து, தாழ்வும், உடைவும், வளைவும் கொண்ட தரையிலிருந்து மேலேறி நேர் வழியை யும், உயர்ந்த திறந்த வெளிகளையும் இவனுடைய உதவியால் அடைகின்றோம்.

இவனை உள்ளத்தே நிறுத்துகிறோம். அறிவும் துணிவும் ஒரு பொருளாகின்றன. வேள்வியின் வளர்ச் சியையும், ஏற்றத்தையும் அக்நி நடத்துகிறான். இவன் புரோஹிதன், ஹோதா, ரித்விக், புறத்தே வேதியர் சூழ்ந்து நின்று செய்வதாகச் சித்திரப்படுத்தும் கர்மங் களை யெல்லாம் உள்ளத்து வேள்வியில் இவன் ஒரு வனே நின்று செய்கிறான்.

நமது வேள்வி தேவருலகத்திற்கு மூண்டு செல் லுகிறது. அந்த மஹா யாத்திரையிலே அதனை ராக்ஷஸர் கவர்ந்து செல்லாத படி அக்நி காக்கிறான்.

இவன் உயிருக்குத் தோழன். நமது காதலன்.

இவனை நம்பினவர்க்குப் பழுதில்லை.

இரவிற்குள்ளே, ஆழ்ந்த இருளிலே மூடிக்கிடப்ப வனும் இந்தச் சுடரைக் கொளுத்தினால் அவனுக்குக்

கண் தெரியும். இது வளர வளர, ஏற ஏற அவன் பரி பூர்ண உண்மையைக் காண்பான்.

உஷையை—ஞானோதயத்தைக் காணும் பொருட்டு இவன் வானை நோக்கி வளர்கின்றான்.

பிராண லோகத்தின் வானங்களிலே ஊடுருவிச் சென்று தேஜோமயமான ஸ்வர் லோகத்தை எய்துகின்றான்.

ஸ்வர் லோகந்தான் அவனுடைய வீடு.

அது உண்மையிடம்; தீரா இன்பம்; அங்கே தேவர்கள் ஸபை கூடியிருந்து அமிர்த பானம் செய்கிறார்கள்.

இங்கே மண்ணுலகில் இவ்வொளி மறைந்திருக்கிறது. பூமிதேவி இவனைக் கருவிலே தரிக்கிறாள். வானத் தலைவனாகிய பிதாவின் காரியங்களுக்கு இவனை விடுவிக்கவில்லை. தனது விளைவுகள் அனைத்திலும், செடிகளிலும், பூண்டுகளிலும், மரங்களிலும் இவனை மறைத்து வைத்திருக்கிறார்கள்.

அறிவு முதிர்ச்சி பெறும்போது, இவன் மண்ணிலிருந்து வானத்தை நோக்கி எழுகின்றான்.

குறிப்பு:—முதல் வியாசத்திலே இந்திரஸ்துதி தொடர்ச்சி மிச்சமிராது பின்னொரு முறை அச்சிடப் பெறும்.

மண்டலம் 1 ஸூக்தம் 32.

அஷ்டகம் 1 அத்யாயம் 2.

வர்க்கம் 36, 38.

இந்திரனைக் குறித்து ஹிரண்ய ஸ்தூப ரிஷி பாடியது:—

விருத்திரன தாயும் அகல வீழ்ந்தாள்.
தாய்மேலும் மகன் கீழு மாயினர்.
இந்திரன் அவள்மீது வீசியிருந்த படையை மீட்டுக்கொண்டான்.
கன்றுடன் கிடக்கும் பசுவைப்போலே கிடந்தனள் தாநு. 9

தங்குதடை யில்லாது பாயும் நதிகளிடையே அவனுடல் அமிழ்ந்திக் கிடந்தது.
விருத்திரனது உடல் மறைவைக்கடந்து நதிகள் விரிந்து பெருகின.
இந்திரனைப் பகைகொண்டோன் நெட்டிருளில் வீழ்ந்தான் 10

கதிர்களைப் பணியென்னும் பகைவன் பிடித்து வைத்தது போலே நதிகளை விருத்திரன் தடுத்துக்கொண்டான்.

அவை பகைவனுக்கும் பத்தினிகளாயின. அவற்றைப் பாம்பு காத்தது.

நீர்த்திரள் வெளிப்படும் வாயில் அடைபட்டிருந்தது.

விருத்திரனைக் கொன்று இந்திரன் அதைத் திறந்தான். 11

இந்திரா முதற்பெருங் கடவுள் உன்னைப் போரிலே செலுத்தினன். அப்போது நீ எமக்கு வலியதோர் உயிர்க்காவல் ஆயினை.

கதிர்களை வென்றாய் சூரா மதுவை வென்றாய் ஏழு நதிகளையும் பெருகும்படி விடுத்தாய். 12

இந்திரனும் விருத்திரனும் போர் செய்தகாலத்தில் பகைவன் விளைவித்த மின்னலும் குமுறலும் இடியும் அவன் பொழிந்த மழையும் இவனைத் தீண்டவில்லை.

பிறகு பகைவனுடைய சேனைகள் வந்தெதிர்த்தன அவற்றையும் இந்திரன் வென்றான். 13

இந்திரா, பகைவனை அழித்தபிறகு அச்சத்தோடு செல்லும் பருந்துபோல, நீ எதன் பொருட்டாகத் தோண்ணூற்றொன்பது நதிகளையும், உலகங்களையும் கடந்து மேலேறிச் செல்லுகிறாய் ?

நீ கண்டு மனமஞ்சத் தகுந்த போராளி, பாம்பிற் கேது?

செல்வன, நிற்பன, அனைத்திற்கும் இந்திரனே அரசன்.

இவன் வயிரப்படை கைக்கொண்டான்.

சிகரங்களுடைய அனந்த மலைக்கும் இவ்வினை வேந்தன்.

தொழில் செய்வோரையெல்லாம் இவனே ஆளு கின்றான்.

ஆரக்கால்களை வளையம் சூழ்ந்திருப்பது போலே இவன் அவரைச் சூழ்ந்து நிற்கின்றான். 15

தீ அக்நி தேவன்.

இவனைக் குறித்த சில வேத மந்த்ரங்களின் ஸாரம்.

முதற் பெருங்கடவுளின் துணிவு, அஃதே தீ.

இவனை இரண்டு அரணிக் கோல்கள் கடைந்து தருகின்றன.

மண்கீழ்க்கோல், வானமே மேற்கோல். கடையும் தொழிலிலே தோன்றுகிறான். ஆதலால் இவன் "வலிமையின் மைந்தன்."

ப்ராண லோகத்திலே இவன் ஏறும்போது, புல்லாந் தரையில் மேயும் மாடு போலே, பூமியின் விளைவுகளை யெல்லாந் தின்று கொண்டு புகையுடன் எரிவான்.

அங்கு வேட்கையின் வலிமை; விடாயின் கிளர்ச்சி; அது தீ. தனது உணவுகளை யெல்லாம் கிழித்து, நாசமாக்குகிறான். தான் போகிற வழியிலே, முன்பு மகிழ்ச்சியும் பொலிவும் திகழ்ந்த இடங்களில், ஒரு கரிக்கோடு மாத்திரமே மிஞ்சி நிற்கும்படி செய்கிறான்.

ஆனால் எதனை அழிக்கிறானோ, அதனை மாசு தீர்க்கிறான். பிறகு, புகை மறைந்து விடுகிறது.

அப்பால், ஞானேயங்களின் முன்னே இவனொரு வெள்ளைப்பரிபோன்று, நம்மை ஏற்றிக்கொண்டு பரமஸ் தானங்களிலே விடுகிறான். அங்கே நமது விருப்பங்களெல்லாம் உண்மை பெறுகின்றன. அறிவு ஸம்பூர்ண மாகிறது. அது களியுடனும், வெற்றியுடனும் தொழில் செய்கிறது.

வேள்வி செய்யும் சூரியனை வேள்வித் தீ இத்தகைய தெய்வ நிலையில் உயர்த்துகிறது. அமரத்தன்மைக்கு வெற்றி யுண்டாகிறது. எண்ணமிட்டும், போர் செய்தும் பாடுபட்டுக் கொண்டிருந்த மனிதனைக் கவியாகவும், ஸ்வராஜனாகவும், இயற்கையின் வேந்தனாகவும் அக்நி தேவன் செய்து விடுகிறான்.

தீயைச் சித்திரங்களிலே புகழ்கின்றோம்.

நமது வாயில்கொண்ட மாளிகையின் தலைவன்; நம்மிடத்தே அன்புடன் விருந்துண்ண வந்தோன்; உயிரிலே இறைவன்; தழலுகின்ற சடைகளையுடைய கவி; தெய்வக் குழந்தை; புண்ய மூர்த்தியாகிய குமார தேவன்; வெல்லொணாத சூரன்; தீ.

மனிதரின் முன்னே சென்று வழி காட்டு வோன்; இறப்பவருள்ளே இறப்பின்றி நிற்போன்; மனிதனுக்குள்ளே தேவர் நிறுத்திய தொழிலாளி; அறிவிலே தடைப்படாதோன்; உண்மையில் முடிவற்றோன்; தீ.

விரிந்தொளிர் செய்யும் உண்மை ஞாயிறு; வேள்வியைச் சுமப்பவன்; அதன் படிகளை வகுப்பவன்; உறுதியான அடிப்படை; தெய்வத்தோற்றம்; ஒளி; காட்சி; தீ.

மித்ரன்.

[மித்ரன் (தமிழில் மித்திரன்) என்ற ஸூர்ய தேவனைக்குறித்து, விசுவாமித்ர ரிஷி பாடியது. இந்த ரிக்குக்கள் தைத்திரீய ஸம்ஹிதை 3-வது காண்டம், 4-வது ப்ரச்நத்தின் கடைசியிலுள்ளன. இலேசான திரிபுகளுடன் ரிக்வேதம் 3-வது அஷ்டகம் 4-வது அத்யாயத்திலே காணப்படுகின்றன,]

1, மித்ர தேவனிடமிருந்து பெறும் ஞானக் கேள்வி தொழில் செய்பவரைத் தாங்குவது; இன்பங்களை வென்று தருவது; உண்மை யுடையது

ஒளிப் புதுமைகள் வாய்ந்தது. (அதனை வாழ்த்து கிறோம்.)

2. மித்ரன் அறிவிலே மேம்பட்டு மாந்தரை நடத்துகின்றான். மித்ரன் மண்ணையும் வானையும் தாங்குவோன். மித்ரன் உயிர்களை இமை கொட்டாமல் பார்த்து நிற்கின்றான். அந்த உண்மைக் கடவுளுக்கு நெய்யொளி கொண்ட உணவு படைப்போம்.

3. மித்ரா, விரதத்தாலே நின்னை உணர்வான் யாவன், அம்மனிதன் இன்பங்களை நன்கு நுகர்க. உன்னாலே காக்கப்படுவோன் (வளர்க்கப்படுவோன்) அழிவு பெறுவதில்லை; தோல்வி யடைவதில்லை; அருகேயிருந்தும் தொலையிலிருந்தும் அவனைப் பாவம் வந்து சார்வதில்லை.

உரை.

காலை ஸந்த்யா வந்தனத்தில் இந்தப் பாட்டுக்கள் உதய ஸூர்யனை நோக்கி ஓதப் படுகின்றன. ஸூர்யன் பரமாத்மாவினுடைய ஞானவொளி; இந்த தேவன் நான்கு அம்சங்களுடையவன்:—(1) மித்ரன், (2) வருணன், (3) அர்யமான், (4) பகன். இவர்களிலே மித்ரன் அந்த ஒளியின் அன்பைக் குறிப்போன், வருணன் அதன் அநந்த நிலை (எல்லையற்ற தன்மை) யாவான். அர்யமான் வலிமைத் தேவன். பகன் அவ்வொளியின் இன்ப வுணர்ச்சியாக நிற்பவன்.

முழுமுதற் கடவுளுக்கு ஒளியே விழி, ஒளியையே சூரியனென்று போற்றுகிறோம். பூலோகத்திலே ஒளியாகத் தோன்றும் சக்திதான் சுவர்க்கலோகத்திலே ஞானமாகச் சுடர்கின்றது. அதன் அன்பு வடிவத்தை,

அதாவது தெய்வீக அன்பையே மித்ரனென்று வாழ்த்துகிறோம்.

1. 'ஞானக்கேள்வி' தேவர்களிடமிருந்து மனிதன் அறிவுச் செவியினாலே பெற்றுக்கொள்வது. அன்பினிடமிருந்து இவ்விதமான கேள்வி பெறுவோர் செய்யும் தொழில்களை யெல்லாம் நழுவுதல் இல்லாத படி அன்பு தாங்கிக் கொள்ளுகிறது.

2. அன்பில்லாவிடில் மனித வாழ்க்கை நடைபெறாது; வானமும் இயலாது. அன்புதான் இவ்வுலக முழுவதையும் சிதறாத படி ஆதரிப்பது; அன்பு ஒரு க்ஷணம் கண் மூடிவிடுமானால், உலகமும் உயிர்களும் அழிந்துபோய்விடும். தேவர்களுக்கு மனிதன் தனது உடைமை முழுவதையும் அர்ப்பணம் செய்துவிடவேண்டும். அதுவே தேவர்களின் "உணவு". 'நெய்யொளி கொண்ட தேவநதிகள்' என்றும், 'நெய்யொளி கொண்ட ஸரஸ்வதி' என்றும், 'நெய்யொளி கொண்ட அறிவு' என்றும் வேதம் பிற இடங்களில் வழங்குவதால், 'நெய்யொளி' என்பதற்கு 'ஞானத்தெளிவு' தான் பொருளென்று தெரிந்துகொள்ளவேண்டும். எனவே, நாம் தேவர்களுக்குக் கொடுக்கும் உணவை ஞானத்தெளிவுடன் கலந்து கொடுக்க வேண்டுமென்று விசுவாமித்ரர் சொல்லுகிறார்.

3. 'விரத' மென்பது விதி, அன்பின் விதிகளை நன்கு வழக்கப்படுத்தினால் அன்பு நம்மை வளர்க்கும், நம்மைக் காக்கும். பிறகு அழிதலும் தோல்வியும், யாவுமும் நமக் கில்லை.

தீ.

(அக்நி தேவன்.)

(ரிக்வேதம் 1-வது மண்டலம் 1-வது ஸூக்தம், இது 'மதுச் சந்தஸ்' (தேனிசை) என்ற ரிஷி பாடியது).

1. தீ வேள்வியின் முன்னிற்பவன்; அதன் பருவங்களை வகுக்கும் தேவன்; அங்கு வானவரை அழைப்பவன்; அவனை வேண்டுகிறேன்.

2. தீயை முன்னைப் புலவர் போற்றினர்; புதியோரும் அவனையே போற்றுக. அவன் இங்கு அமரரைக்கொண்டு தருக.

3. நாளுக்கு நாள் வளருஞ் செல்வமும், வீரமிக்க புகழும் தீயாலே பெறுக.

4. தீயே, நெறியிலோங்கும் வேள்வி யதனை நீ எப்புறத்துஞ் சூழ்ந்து காக்கிறாய், அஃதே வானவரிடம் சேரும்.

5. தீ வானவரை யழைப்போன்; புலமையுள்ள செய்கைத் திறமை யாவோன்; சித்திரமாகிய ஞானக் கேள்வி தருவதிலே சிறந்தோன்; அவ்வானவன் வானவருடன் வருக.

6. அன்ப, வேள்வி தருவோனுக்கு நீ சீர் தருவாய். அதுதான், தீயே, நின துண்மை.

7. தீயே, நின்பால் நாள்தோறும், இரவும் பகலும் நாம் பணிவேந்தி வருகிறோம்.

8. நெறியிலோங்கும் வேள்விகளின் அரசே, நேர்மை காப்பாய், சுடர் வீசுவாய், தனது மனையிலே வளர்வாய், தீயே, நின்னை யடைகிறோம்.

9. அருகே போவதற்கெளியவனாய், மகனுக்குத் தந்தைபோல் நீ எமக் காகுக. நல்வாழ்வு பெறும்படி எம்மை நீ சார்ந்திடுக.

உரை.

"அமிர்தத்தின் பிறப் பிடமாகிய ஸூர்யன் என்ற ஒளியில் நான் என்னையே ஹோமஞ் செய்து கொள்ளுகிறேன்" என்று வேத ரிஷிகள் தமது வேள்வியின் பொருளைத் தாமே வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இன்றைக்கும் காலையில் ஒவ்வொரு வைதிகனும் இந்த மந்த்ரத்தைச் சொல்லுகிறான். இவ்விதமான வேள்வி நடை பெறவேண்டுமானால் அதற்குத் தீயின் துணை வேண்டும். தீ என்பது தவக் கடவுள். தெய்வீகமாகிய அறிவுத்துணிவு தீ எனப் படும். "தேவருக்கு என்னை ஆஹுதி செய்து விட்டு அவர்கள் தரும் அமிர்தத்தை உண்டு நானும் அமரனாகி விடுவேன். இதை அஸுர சக்திகள் தடைசெய்ய மாட்டார்" என்று மனதிலே நிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளும் போது தீ பிறக்கிறது.

1. தீயை எழும்பும்படி செய்தால் போதும். பிறகு இந்த வாழ்க்கை—வேள்வியின் பொறுப்பு என்னைச் சார்ந்ததன்று. அவனே வேள்வியை அதன் பருவங்களுக்குத் தக்கவாறு படிப்படியாக மேலே ஏற்றுக் கொண்டு போகிறான். எல்லா விதமான தெய்வ சக்திகளையும் அங்கு அழைத்து வருகிறான்.

2. 'நமக்கு முன்னே விடுதலைபெற்ற மகரிஷிகளெல்லோரும் தீயையே துணை கொண்டனர். புதிய ரிஷிகளாகிய நாமும் அவனாலேயே விடுதலைபெறு

வோம்' என்று முதல் வேதத்தின் முதல் ஸூக்தம் சொல்லுகிறது! ரிஷி பரம்பரையின் ஆரம்பத்தை எப்படி யறிவோம்!

3. 'செல்வம்' என்பது இவ்வுலகச் செல்வங்கள், ஞானச் செல்வங்கள் ஆகிய இரண்டையும் குறிப்பது. இவற்றை நமக்கு அக்நிதேவன் தருவான்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்" என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

தீக்கடவுள் எல்லா மனிதரிடத்தும் உள்ளத் திண்மையாக நிற்கின்றான். அவனை வளர்த்தால் எண்ணிய பொருள் எதுவும் எவ்வுலகத்திலும் கைகூடும்.

4. மனித நிலையிலிருந்து அமரநிலை நோக்கிச் செல்லும் வழிதான் வேள்வி போகும் வழி.

5. 'ஞானக் கேள்வி' இன்னதென்பதை மேலே காட்டி யிருக்கிறேன்.

6. முழுதும் பணிவு கொள்வதே தேவரை அழைக்கும் வழி. அஹங்காரத்தை விட்டு, இவ்வுடல் முதலியவற்றை தேவருடைமை யாக்கி அவரையே சரணடைந்து விடுதல் வேண்டும்.

7. நேர்மை—சொல்லிலும், நடையிலும், உள்ளத்திலும் முழு நேர்மை—காணும்போது அங்கே அக்நி சக்தி பிறந்திருப்பதாக அறிந்து கொள்ளலாம். உள்ளத்திண்மை இல்லாவிடில் நேர்மையைக் காத்தல் அரிது.

ரிக்வேதம் மண்டலம் 1 ஸூக்தம் 2 அஷ்டகம் 1 அத்யாயம் 1 வர்க்கம் 3–4.

(மதுச்சந்த (தேனீசை) ரிஷி வாயு இந்திரன் மித்திரன் வருணன் என்ற தேவர்களைக் குறித்தெழுதியது ஒன்பது பாட்டுடையது.)

உயிர் அல்லது வாயுதேவன்.

(1) காற்றே வா, காட்சி யுடையாய், இங்கு நின் பொருட்டுத் தேன்கள் புனைந்து வைத்திருக்கின்றோம்.

அவற்றை அருந்து; கூவுதலைக் கேள்.

(2) உயிரே, மந்திரங்களால் நின்னைத் துதி செய்கின்றனர்;

(யாவர்?) பண் பாடுவோர், தேன் பிழிந்தோர், பகலறிந்தோர்.

(3) உயிரே, நிறைவுதரும் நினது இன்ப ஒடை வேள்வி தருவோனை நோக்கிப் பாய்கின்றது.

(அஃது) தேன் பருகுமாறு விரிவுகொண்டது.

உயிரும், அறிவுச்சுடரும் (இந்திரன், வாய்வு).

(4) இந்திரா, காற்றே, இங்கு சாறுகள் பிழிந்திருப்பது காணீர். இங்கே இனிமைகள் கொண்டு வருக. தேன்கள் நும்மை விரும்புகின்றன.

(5) வளத்தின் கருப்பொருளிடையூர் காற்றே, இந்திரா, சாறுகளின் சுவையறிவீர்; விரைவுடன் இங்கு வருக.

(6) காற்றே, இந்திரா, ஸோமம் பிழிவோன் செம்மையாகச் செய்யும் வேள்வியின் கண்ணே, நேர்மையறிவுடன் வீரரே விரைந்து வருக.

அன்பும் விரிவும் (மித்திர வருணர்).

(7) தூய பகுத்தறிவு கொண்ட மித்திரனை அழைக்கிறேன். பகைவரை மாய்க்கும் வருணனை அழைக்

கிறேன். அவர் தெளிவுடன் ஒளிரும் அறிவைச் சமைப்போர்.

(8) நேர்மையை வளர்ப்போர், நேர்மை நிலை பற்றுவோர், அந்த மித்திர வருணர் நேர்மையினாலே பெரிய வேள்வித்திற மடைகின்றனர்.

(9) மித்திர வருணர் கவிகள், பல பிறப்புடையோர் விரிந்த மனையுடையோர், அவர் நம்மைத் திறமையுடைய தொழிலில் நாட்டுக.

(குறிப்பு:—இதற்கும் கீழே மொழி பெயர்க்கப் படும் இன்னு மிரண்டு ஸூக்தங்களுக்கும் விளக்கம் பின்னிட் டெழுதப்படும்.)

மேற்படி மண்டலம் ஸூக்தம் 3.

மேற்படி அஷ்டகம் அத்தியாயம்

வர்க்கம் 5—6

(மதுச்சந்த ரிஷி அசுவி நௌ தேவரையும், இந்திரனையும், வானவர் கூட்டத்தையும், ஸரஸ்வதி தேவியையும் பாடியது பன்னிரண்டு பாட்டு.)

அசுவி நௌ தேவர்.

(குறிப்பு:—"அசுவி நௌ" என்றால் குதிரையேறி வரும் இருவர் என்பது பொருள். இவர் இரவு பகலைக் குறிப்பிடுவதாகச் சில ஐரோப்பிய பண்டிதர்கள் கருதுகிறார்கள், தேவ வைத்தியரென்பது புராணக் கொள்கை. தமிழிலே வாசி என்ற சொல் குதிரையைக் குறிக்கும். இது வாஜி என்ற வடமொழியின் திரிபு. இந்தச் சொல்லை யோகிகள் உயிர்க்காற்றென்ற பொருளில் வழங்குவதுண்டு. அசுவம் என்பதுஉயிர்த்திறமை. அத்திறமையை அதன் போக்கு வரவுகளிலே பாதுகாக்

கும் இரண்டு வித சக்திகளே அசுவினௌ தேவர் என்பது யோகிகளின் மதம்.)

(1) புரவி நடத்துவீர் விரைந்த நடை கொண்டீர், நன்மைத் தலைவரே பல இன்பங்களுடையீர், எமது வேள்வியின் விருப்பங்களிலே மகிழ்ச்சி பெறுக.

(2) இருவிர் பரியூர்ந்து வருவீர், பல வெற்றிகளையுடையீர், வீரரே மதிசிறந்தீர், நமது வலிமைகொண்ட அறிவினால் எமது சொற்களை விரும்புக.

(3) வெல்வீர், இளமையுடையீர், நெறி செல்வீர், ருத்ரன் வழிகண்டீர், வேள்விப்புல்லை நன்றாகத் துணித்துப் பரப்பி வைத்திருக்கும் மனிதரிடத்தே ஸோம ரஸங்களை உண்ணும்பொருட்டு வருக.

இந்திரன்.

(4) வருக, இந்திரா, சித்திரக் கதிரோய் இந்தத் தேன்கள் நின்னை விரும்பி நிற்கின்றன. இவை நுட்பங்களாலே முழுதும் தூய்மை செய்யப்பட்டன.

(5) வா, இந்திரா, அறிவினாலே தூண்டுதல்பெற்று ஞானிகளின் ஏவுதல் கொண்டு இங்கே ஸோமத்துடன் வேண்டுவோனது மந்திரங்களை நோக்கி வா.

(6) இந்திரா, புரவி யூர்வாய், விரைவுடன் எம்முடைய அறிவு மந்திரங்களை நாடிவருக, எமக்கு ஸோமத்திலே இன்பத்தை நாட்டுக.

விசுவ தேவர் (வானவர் கூட்டம்).

(7) வானவர் எல்லீரும் வாரீர்; காப்புத் தொழிலுடையீர், தொழில் செய்வோரைத் தாங்குவீர், ஸோமந் தருவோனுக்கு (நன்மைகள்) தருவீர், வருக.

(8) வானவர் கூட்டமே, ஆறுகளைக் கடப்பீர்,

எமது ஸோமத்தை நாடி வருக, மந்தைக்கு வரும் ஆவினம் போலே.

(9) வானவர் கூட்டமே, பகையுற்றீர், பல சூழ்ச்சிகளுடையீர், தீங்கற்றீர், தாங்கும் வலிமை யுடையீர், வேள்வியை விரும்புக.

ஸரஸ்வதி.

(10) தூய்மை செய்வாள் ஸரஸ்வதி; வளங்களிலே வளமுடையாள், கருப்பொரு ளாவாள் நமது வேள்வியை அறிவினாலே தாங்குக.

(11) உண்மைகளைத் தூண்டுவாள். நல்ல மதிகளை ஒளிபெறக் காண்பாள், நமது வேள்வியை ஸரஸ்வதி தாங்குகின்றாள்.

(12) (உண்மைப்) பெருங்கடலைக் காட்சியினாலே தெளிவுறச் செய்கின்றாள். அறிவுக ளனைத்திலும் ஸரஸ்வதி அரசு செய்கின்றாள்.

ஷ மண்டலம் ஸூக்தம் 4.

ஸ்ரீ அஷ்டகம், அத்யாயம், வர்க்கம் 7–8–.(மதுச்சந்த ரிஷி இந்திரனைப் பாடியது பத்துப் பாட்டு.

இந்திரன்.

1. நல்ல வடிவங்கள் சமைக்கும் இந்திரனை நாள் தோறும் காக்கும்படி அழைக்கின்றோம்; பால் வேண்டுவோர் நன்கு கறக்கும் ஆவினை நாடுவதுபோல.

2. எமது தேன்பிறிவுகளை நாடி வருக. ஸோமமுண்பாய், எமது ஸோமத்தை யுண்ணுக, செல்வனாகிய நினது களி எமக்குக் கதிர்களைத் தருமன்றோ?

3. இனி நினது மிகவும் நுட்பமாகிய மதிகளை அறியக்கடவோம்.

எம்மை நீ கடந்து சென்று விடலாகாது.

4. வேள்வி செய்யும் மானுடனே இந்திரன் வலியவன், அழிக்க வொண்ணாதான், தெளிவுடையோன். அவனிடம் உதவி கேள். நினது நண்பருக்கு அவன் வரமளித்தான்.

5. இந்திரனிடத்தே செயல்களை ஒப்புக்கொடுத்து விட்டுப் பிறகு நம்மவர் நமது பகைவரை நோக்கி இங்கிருந்து விலகி யோடுவீர்" என்று கூறுக.

6. நமக்கு அழிவு செய்ய நாடும் பகைவர் நம்மை நற்பேறு பெற்றோ ரென்று பேசுக; இந்திரனுடைய இன்பத்திலே இருந்திடுவோம்.

7. வேள்வி செய்வோய், விரைந்து வரும் இந்திரனுக்கு விரைவுடைய தேனைக் கொண்டுவா; இத்தேன் வேள்வியின் செல்வம்; வீரருக்குக்களி தருவது; தோழரைக் களிப்புறச் செய்யும் இந்திரனை நோக்கி வீழ்வது.

8. நூறு வேள்வித்திர னுடையாய் இந்திரா—இத்தேனையுண்டு விருத்திரரை (மறைப்புப் பேய்களை) கொன்றிடுவாய்; வளமுடைய மனிதனை வளங்களிலே காப்பாய்.

9. இந்திரா, வேள்வித்திறன் பல வுடையாய், வளமுடைய நின்னை வளமிகச் செய்கின்றோம். செல்வங்கள் பெறும் பொருட்டாக.

10. இன்பச் செல்வங்களை வென்று தருவான், பெரியோன், நன்கு கரையேற்றுவோன், தேன் பிழியும் மனிதருக்கு நண்பன், அவ்விந்திரனைப் பாடுங்கள்

'முக்கியமான பிழை திருத்தம்:—4-வது வ்யாஸத்தில் முதல் மண்டலத்து முதல் ஸூக்தம். அதிலே

முதற்பாட்டில் " அவனை வேண்டுகிறேன் " என்ற சொற்களின் முன்பு, " செல்வங்களை மிகுதியுற நாட்டுவோன் " என்ற சொற்களைச் சேர்த்துப் படித்திடுக.'

ரிக்வேதம், முதல் மண்டலம். ஐந்தாம் ஸூக்தம்.

முதலஷ்டகம், முதலத்யாயம், வர்க்கம் 9, 10.
இந்திரனை மதுச்சந்த ரிஷி பாடியது.

(மொழி பெயர்ப்பு).

வாருங்கள், வீற்றிருங்கள், இந்திரனைப் பாடுங்கள், துணைவரே ஸ்தோமங்களைச் சுமப்பவர்கள்! (1)

(ஸ்தோமம் மந்த்ர ப்ரதிஷ்டை)

பல செல்வங்க ளுடையவனை, விரும்பத் தக்க இன்பங்களின் அரசனை, இந்திரனை, ஸோமரஸம் பிழியுமிடத்தே, ஒன்றுகூடிப் (பாடுங்கள்). (2)

அவன் எங்கள் யோகத்திலே அமர்க. செல்வமும், பலவகை யறிவும் பெருகும்படி அவன் எம்மிடத்தே பொருந்துக. அவன் நம்பொருட்டு வளமைகளுடனே வருக. (3)

போரில், மோதுமிடத்து, இவன் குதிரைகளைப் பகைவர் நயப்பதில்லை. (அஞ்சுகின்றனர்) இவ்விந்திரனுக்குப் பாட்டுச் சொல்லுங்கள். (4)

ஸோம முண்பானுக்கு இந்த ஸோமங்களை வடித்தோம். இவை தூய்மை யுடையன, விருந்துக் களி தருவன, கட்டிப்பால் கலந்தன. (5)

(உரை:—பால் என்பது ரிஷிகளின் பாஷையிலே ஒளிச்சுவை என்றும் பொருள் படும்: 'கோ' என்னும் மொழி பசுவென்றும், ஒளிக்கதிரென்றும் இரண்டு

பொருள்பட வழங்குதல் வேதத்தில் ஸர்வ ஸாதாரண மானது.)

இந்திர. செய்கை நலமுடையாய், ஸோமத்தின் முதற் பானத்துக்கு நீ பிறந்து விட்டாய்.

பிறக்கும்போதே முதிர்ந்த வலிமையுடன் வந் தாய். (6)

விரைவு கொண்ட ஸோமங்கள் நின்னுள்ளே பாய்க. இந்திரா, பாட்டினை விரும்புவோய், அறிவோங் கிய நின்னிடத்து நலங்கள் சார்ந்திடுக. (7)

உன்னை ஸ்தோமங்கள் வளர்த்திடும் பல வேள் விகளின் இறைவனே, உன்னைச் சொற்கள் பெருகும் படி செய்யும். எமது பாட்டுகள் உன்னை வளர்த் திடுக. (8)

எல்லா வகை ஆண்மைகளும் உடைய ஆயிரவித மான பெருவளத்தை இந்திரன், தேயாத காவல் செய் பவனாகி, எமக்கு வென்று தருக. (9)

உடல்களைக் கொல்லும் காலன் எமக்குத் துன் பஞ் செய்யாதொழிக. இந்திரா, பாட்டை விரும்பு வோய், அவன் படைக்கலத்தை நீ தடை செய்திடுக. (10)

முதல் மண்டலம், ஆறும் சூக்தம்.

முதலஷ்டகம், முதலத்யாயம், வர்க்கம் 11–12 இந்திரனையும் மருத்துக்களையும் மதுச்சந்த ரிஷி பாடியது.

(மொழி பெயர்ப்பு.)

அவனைச் சூழ்ந்து நிற்போர் வேகமும், ஒளியுமுடைய சிவப்புக் குதிரையைத் (தேரிலே) பூட்டுகிறார்கள். வானத்திலே சுடர்கள் ஒளி வீசுகின்றன. (1)

விரும்பத்தக்கன, செந்நிறமுடையன, அறிவுடையன, வீரனைப் பொறுப்பன, இங்ஙனமாகிய குதிரைகளிரண்டையும் இந்திரனுடைய தேரில் இருபுறத்திலும் பூட்டுகின்றனர். (2)

ஒளியில்லாத விடத்தே ஒளியினைச் செய்து, வடிவமில்லாத விடத்து வடிவத்தினை அமைத்து, வீரனே, நீ புலரிகளுடன் பிறந்து விட்டாய். (3)

(உரை:—புலரி—வைகறை, காலைச் செவ்வானம். இங்கு 'புலரிகள்' என்பது ஞானோதயங்களை)

பின்பு தமது வழக்கப்படி மருந்துக்கள் மீளவும் பிறந்தனர், தமது வேள்விப் பெயர் கொண்டனர். (4)

இந்திரா, கோட்டைகளை உடைத்து, மறை விடங்களிலே வேள்வியைச் சுமந்து செல்லும் மருத்துக்களுடனே, நீ ஒளிக்கதிர்களைச் சென்று மீட்டுக் கொடுத்தனை. (5)

(உரை:—மருத்துக்கள் புயற் காற்றின் தேவர், இவர் நமது அறிவொளியை மூடும் இருள்களை . . .

லாம் சாடிப்புடைத்துக் குத்தி யொழித்துவிட்டு, வான மழையையும், ஒளியையும் பெறும்படி செய்வர்.)

பெரியோன், ஞானக் கேள்வியுடையோன், செல்வங்கள் தேடிக்கொடுப்போன். அவ்விந்திரனை நோக்கி மதியின்படி பாடலுற்றனர். பாட்டினாலே தேவநிலை பெற விரும்புவோர். (6)

அஞ்சாத இந்திரனுடன் நீயும் வந்து எங்கள் முன்னே தோன்றுக. நீங்க ளிருவரும் களியுடையீர். நிகரான ஒளி யுடையீர். (7)

(குறிப்பு:—இந்தப் பாட்டில் நீ என்ற சொல் மருத்துக்களின் கூட்டத்தைக் குறிப் பிடுவதாகப் பழைய உரைகாரர் சொல்லுகின்றனர்.) (8)

பழிக்கக்கூடாதவர், ஒளி சார்ந்தோர், இந்திரனுடைய விரும்பத் தக்க கணங்கள் இந்த மருந்துக்களால் வேள்வி வலிமையுடன் ஒளிர்கின்றது. (9)

எங்கும் ஸஞ்சாரம் செய்வாய், இந்திரா, இவ்வேள்வியிலே நின்னை வாக்குக்கள் ஒன்றுகூடி வேண்டுகின்றன. அங்கு, அச்சுடர் தரும் அறிவு வானத்திலிருந்து வருக.

அல்லது இங்கு இம்மண்ணைச் சார்ந்த வானத்தினின்றும் வருக. அல்லது மஹோ லோகத்திலிருந்து வருக. (10)

முதல் மண்டலம் ஐந்தாம் ஸூக்தம்:—

சுத்தமான அறிவு வட்டம் எங்கும் நிறைந்திருக்கிறது. அதன் தலைமைக் கடவுள் இந்திரன்.

இந்திரனை நமதுள்ளத்திலே ஸ்தாபனம் செய்ய வேண்டுமானால், அதற்குரிய மனை நிச்சயம் செய்து கொள்ளவேண்டும். அம்மனை நிச்சயம் மந்திரவாக்காக வெளிப்படுகின்றது. (மந்திரம், மநம், என்ற இரண்டு சொற்களும் வடமொழியில் 'மந்' என்ற ஒரே பகுதியில் தோன்றியவை). இந்திரன் வருகையை வேண்டி இந்த ஸூக்தம் சொல்லப்படுகின்றது. தேவர்களை அழைப்போர் முன்னதாகவே ஸோமரஸம் பிழிந்து வைக்கிறார்கள். ஸோமப் பச்சிலையை உரலிலே போட்டு உலக்கையால் இடித்து ஸோமரஸம் பிழியப்படுகிறது. யோகானுபவத்திலே உரல் பிரகிருதி; உலக்கை சேதநத் திறமை. உயிர்வாழ்க்கை என்ற இலையை இங்ஙனம் பிழியும் போது சித்தத் தெளிவாகிய ஸோமரஸம் பிறக்கிறது. யோகசித்தியும் மூவுலகின் செல்வங்களும், அறிவும் பல வகை தரும்பொருட்டு இந்திரனை வேண்டுகிறோம். (5—3)

மனித அறிவிலே தெய்வத்திறமைகள் தோன்றுவதை தேவர்களின் புதிய பிறப்பென்று ரிஷி வர்ணிக்கிறார். இங்கு இந்திரன் பிறப்பும், அடுத்த ஸூக்தத்தில் மருத்துக்களின் பிறப்பும் இப்பொருளிலே கொள்ளத் தக்கன.

முதல் மண்டலம் ஆறாம் ஸூக்தம்:—

நமது மனமாகிய வேள்விக்கூடத்தை நோக்கி இந்திரன் புறப்படுகிறான். சிவந்த ஒளியும் துணிவுமுடைய குதிரைகளால் அவனுடைய தேர் இழுக்கப்படுவதாகக் கவி கற்பனை செய்கிறார்.

பிறகு மூன்றாவது படியில், இந்திரன் நமது மனோ மண்டலத்தில் வந்தபிறகு நடக்கும் செய்திகளைக் காட்டுகின்றார். அவன் வருமுன்னே ஒளியின்றி யிருந்தது. அவன் வந்தவுடன் ஒளி யுண்டாயிற்று. அவன் வருமுன்னே நமது மனோமண்டலத்தில் நல்ல திருத்தமான வடிவங்கள் அமைந்திராமல் கலங்கிக் குழப்பமுற்றுக் கிடந்தது. அவன் வந்துவிட்டானே; அங்கு நல்ல வடிவங்கள் உண்டாயின. அதாவது, ஒழுங்கும் அழகுமுண்டய மனோ நியமங்கள் ஏற்பட்டன; பிறகு, "வைகறைகள்" என்று சொல்லப்படும் ஞானோதயங்கள் தோன்றின. பின்பு, அங்கே இந்திரனுடைய சேனை மறவராகிய மருத்துக்கள் என்னும் தேவர் பிறக்கிறார்கள். இந்திரன் தான் தோன்றும்போது அஞ்ஞானம், அச்சம், கவலை முதலிய தன் பகைவரைக் கொல்லும் பொருட்டுப் படையுடன் வருகின்றான்.

ஒளியின் கதிர்களை அசுரர் ஆங்கோர் இருட் குகையில் மறைத்து வைத்திருக்கிறார்கள். இந்திரனும், மருத்துக்களும் அசுருடைய கோட்டையைத் தகர்த்து, உள்ளே புகுந்து, அவ்வொளிக் கதிர்களை விடுவித்துக் கொடுக்கிறார்கள்.

வலிமைகொண்ட மந்திரங்களாலே, அதாவது மனோ நிச்சயங்களாலே, மனிதன் இவ்வுலகத்தில் அமரநிலையடைகின்றான், அதுபற்றியே, "பாட்டினால் தேவநிலை பெற விரும்புவோர் இந்திரனைத் தமது மதியின் படி பாடலுற்றனர்" என்று ரிஷி சொல்லுகிறார்.

(1—191—6.)

வான் உங்களுக்குத் தந்தை. மண் உமக்குத் தாய். ஸோம ரஸம் உடன் பிறந்தது. அதிதி உடன் பிறந்தாள்.

(8—101—15.)

ருத்திரர்களின் தாய், வஸுக்களின் மகள், தன் மக்களாகிய தேவருக்கெல்லாம் உடன் பிறந்தாள். அமிர்தத்தின் ஊற்றுவாள்—அறிவுடைய மனிதனுக்குச் சொல்லுகிறேன். மாசற்ற ஒளியாகிய அதிதியை மறுக்கலாகாது.

(10—63—10.)

நன்கு காக்கும் மண்ணாகவும், நிகரற்ற வானாகவும் அதிதியே விளங்குகிறாள்; நிறைந்த நலந்தருபவள்; நன்கு நடத்துபவள்; அந்த அதிதியாகிய தெய்வத் தோணியிலே, நாம் நல்ல நிலையின் பொருட்டாக ஏறிக்கொள்ளுவோம். அது நல்ல தண்டுகளுடையது, மாசற்றது, தொளையில்லாதது.

(10—36—3.)

எல்லாத் தீமையினின்றும் நம்மை அதிதி காத்திடுக. அவள் மித்திரனுக்கும் செல்வ மிகுந்த வருணனுக்கும் தாய். அவளாலே அழிவற்ற வானொளியைச் சேர்ந்திடுவோம்.

(9—74—3.)

அதிதியின் நேர்மை நெறியிலே செல்வோன் விசாலமான ஒளிப்பாதையிலே செல்லுகின்றான்.

7

(2—27—7.)

ராஜமாதாவாகிய அதிதியும், அர்யமானும் நம்மை நல்ல வழிகளிலே செலுத்திப் பகைமைகளை யெல்லாம் கடக்கும்படி செய்க. நாம் நல்ல வீரராகிப் பகைமை தீர்ந்து மித்ரவருணரின் மங்களத்தில் வாழ்வோ மாக.

(அர்யமான் வலிமைத் தெய்வம்; மித்ரன் அன்புத் தெய்வம்; வருணன் விரிவுத் தெய்வம்.

(8—67—14.)

கட்டுண்ட திருடனை அவிழ்த்து விடுவதுபோல, எம்மை ஓநாய்களின் (ராக்ஷஸரின்) வாயிலிருந்து அதிதியும் அவள் மக்களும் விடுதலை செய்க.

(8—18—6.)

இரண்டற்றவ ளாகிய அதிதி பகலிலும், இரவிலும் எமது செல்வத்தைக் காத்திடுக. எப்போதும் வளர்ப்பவளாகி எம்மை அவள் தீமையினின்று காத்திடுக.

(8—18—7)

மதியிலே நிற்பவளாகிய அதிதி நமக்குப் பகலொளியிலே துணை புரிய வந்திடுக. அவள் நமக்கு மங்களமயமாகிய பேரின்பத்தைத் தருக. அவள் நமது பகைவரை (ராக்ஷஸரை) யெல்லாம் ஒழித்திடுக.

(1—185—3.)

நிகரற்றதும், தீங்கற்றது மாகிய அதிதியின் வரத்தை வேண்டுகிறேன்.

(7—40—2.)

தேவியாகிய அதிதி நமக்குப் பெருஞ் செல்வம் தருக.

(10—100—1.)

அனைத்தையும் சமைப்பவளாகிய அதிதியை வேண்டுகிறேன்.

* * *

சில திருஷ்டாந்தங்கள் காட்டினேன். பிற்காலத்துக் கதைகளிலே அதிதியின் உண்மைப் பொருள் மறைந்து விட்டது. 'அநந்த சக்தியை' ஒரு ரிஷி பத்தினி யாக்கிவிட்டார்கள். அதிதி யென்பது எல்லையில்லாத பரமாத்ம-சக்தி. அஹங்காரம் பிரிவு படுத்துகிறது; கட்டுப்படுத்துகிறது. நான் என்ற பிரிவுணர்ச்சி நீங்கும்போது மனிதன் எல்லை யற்ற நிலையுடன் பொருந்துகிறான். அதுவே அதிதியோகம் அல்லது சக்தியோகம் என்று சொல்லப்படும். அதிதியின் மக்கள் ஆதித்யர். இது தேவருக்கெல்லாம் பொதுப் பெயர். ஸூர்யனுக்குச் சிறப்புப் பெயராக வழங்குகிறது. அதிதியைச் சரணமடைந்தோரும் ஆதித்யரே யாவார்.

வாக்கு.

வேதத்தில் வாக்கை ஒரு தெய்வமாகச் சொல்லியிருக்கிறது. திருஷ்டாந்தமாகப் பின்வரும் மந்திரங்களை நாம் ஏற்கெனவே படித்திருக்கிறோம்:—

"நம்மைப் பரிசுத்தம் செய்வாள், ஸரஸ்வதி வளங்களிலே மிகுந்தாள், அறிவுச் செல்ல முடையவள், (நமது) வேள்வியைத் தாங்கு."—ரிக் 1—3—10.

"உண்மை யொளிகளைத் தூண்டுவாள், நல்ல மதிகளை விளங்கச் செய்வாள், ஸரஸ்வதி வேள்வியைக் காக்கின்றாள்."—ரிக் 1—3—11.

"பெருந் வெள்ளமாகிய ஸரஸ்வதி, ஞானவொளி யால் விளக்குவாள், எல்லா அறிவுகளிலும் கதிர் செய்கின்றாள்."--ரிக் 1—3—12.

வாக்கென்பது மூலத்திலே படைத்தல் என்று பொருள்படும். ஸரஸ்வதியை இந்திரனுடைய மறை வுயிர் என்று சொல்வதுண்டு. ஸ்ருஷ்டியே வாக்கு, ஸ்ருஷ்டியே சக்தியான படியாலேதான் புராணக்காரர் ஸரஸ்வதியைப் பிரம்மாவின் சக்தியென்றார். பைபிள் புஸ்தகத்திலே "ஆரம்பத்தில் வாக்கிருந்தது; அந்த வாக்கு ஈசனோ டிருந்தது; அந்த வாக்கே ஈசன்" என்று சொல்லப்படுகிறது. சக்தி பரம புருஷனோடிருப் பதையும், அவ்விரண்டும் ஒன்றென்பதையும் அந்த வாக்யம் காட்டுகிறது.

* * *

ஸரஸ்வதி பூஜை—உண்மை வழி.

சொல்லை ஸாதாரணமாக நினைத்துவிட லாகாது. உண்மைச்சொல் க்ஷேம மந்திர மாகும். பொய்ச்சொல் அழித்துவிடும். "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்."

இவளை அறிஞன் தனக்குள்ளே ஞான வெள்ள மாகக் காண்கிறான். அவனுடைய அறிவு கதிர்விடுகின் றது. இவளுடைய பூஜைக்கு முக்ய வழிகள் எவை? தான் எப்போதும், எவ்விடத்திலும் உண்மை சொல் லுதல், பிறர் உண்மை சொல்வதை எப்போதும், எவ் விடத்திலும் விருப்பத்தோடு கேட்டல், என்ற இவ்

விரண்டுமேயாம். தான் உண்மை சொல்வது மிகவும் சிரமமாய் விட்டது. பிறர் உண்மை சொல்வதைக் கேட்கும்போது நாராச வாணமாய்விட்டது, ஸாதா ரண நிலையில், மனித வாழ்க்கை அத்தனை கோணலாகி விட்டது, மனித அறிவு அவ்வளவு குழப்பமடைந்து நிற்கின்றது.

தேவ வாக்கு அவதார ஸரஸ்வதி.

வேத மார்க்கமாகிய வேள்வியின் ரஹஸ்யப் பொருளை உணர்ந்து நடந்தால் உண்மை சொல்வதி லும் துன்பமிராது; கேட்பதிலும் துன்பமிராது. 'உலக வாழ்க்கையே தேவருக்குச் செய்யப்படும் வேள்வியல் லவா! அதனை ஸரஸ்வதி்ய தரிக்கவேண்டு',மென்று மதுர்சந்த ரிஷி வேண்டுவதை மேலே கண்டோம். உண்மைச் சொல்லே ஸரஸ்வதி வசம் நமது வேள்வியை ஒப்புக்கொடுப்பதற்கு முக்கிய வழியென்றோம். இத னுடன் நிந்தை, பழி, சாபம், பயம், அசுசி, இவற்றி னால் வாக்கை மாசுபடுத்தா திருக்கவேண்டும். அமங்கள வார்த்தைகளும் அவச் சொற்களும், பயவசனங்களும் தீமைதரும். பரிபூர்ணமான தீரமும், வலிமையும், உண் மையும், திருத்தமும், தெளிவும் பொருந்திய வாக்கே தேவ வாக்கென்று சொல்லப்படும். மனித ஜாதிக்கு தேவ வாக்குப் பிறந்திடுக.

ஸரஸ்வதியும் இலக்கியமும்.

உலக நடையிலே, உண்மை முதலிய குணங்கள் ஸரஸ்வதி தேவியின் கருணைக்கு நம்மைப் பாத்திர

மாக்கி, நம்மிடத்திலே தேவ வாக்கைத் தோன்றுவித்து நமது வேள்வியைக் காக்குமென்பது கண்டோம். இலக்கியக் காரருக்கோ வென்றால் இத்தெய்வமே குலதெய்வம். அவர் இதனைச் சுடர்செய்யும் உண்மையுடனே போற்றவேண்டும். எதுகைமோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் ஸரஸ்வதி கடாக்ஷத்தை இழந்து விடுவான். யமகம், திரிபு முதலிய சித்திரக்கட்டுக்களை விரும்பிச் சொல்லுக்குத் தக்க படி பொருளைத் திரித்துக்கொண்டு போகும் கயிறு—பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படி செய்கிறான். அவசியமில்லாத அடைமொழிகள் கோப்போன் அந்த தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிகின்றான். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியஞ் செய்வோன் அந்த சக்தியைக் கரித்துணியாலே மூடுகின்றான். "வெள்ளைக்கலை" யுடுத்துவதில்லை. மனமறிந்த உண்மைக்கு மாறு சொல்லும் சாஸ்திரக்காரனும் பாடடுக்காரனும் ஸரஸ்வதிக்கு நிகரில்லாத பாதகம் செய்கின்றனர். இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ்வுயிருடைய வாக்கே அருள் வாக்கென்று சொல்லப்படும்.

மருத்.

(புயற்காற்று).

முகவுரை.

(ரிக்—மண்ட் 1, ஸூ 39, அஷ் 1;
அக்டோபர் 13—19).

இது, கண்வ ரிஷி காட்டிய மந்திரம் மருத்துக்களென்றால் புயற் காற்றடிக்கும் தேவர். இவர்களுக்கு ராணுவ மக்கள் ருத்ரன், அஞ்சத் தக்கவன். அவனுக்கு மூவுலகமும் நடுங்கும். பரமாத்மாவின் ஸம்ஹார வடிவத்துக்கு வேதம் ருத்ரன் என்ற பெயர் சொல்லுகிறது. அவன் தன்னைச் சரணமடைந்தோருக்கு எங்கும், எப்போதும் நல்ல துணையாவது போல், இவன் மக்களும் இந்திரனுடைய மறத் தோழருமாகிய மருத்துக்கள் இருளை ஒழிப்பதிலே கொடியதாயினும் வேள்வி செய்வோருக்கு நன்மை யெல்லாந் தருவர். வானத்திலே தோன்றும் புயற்காற்றுக்களையும், உள்ளத்திலே காணப்படும் உக்ர வேகங்களையும் ஆட்டிவைப்போர் மருத்துக்கள். இவர்களைச் சரணமடைந்தால் காவலும், இன்பங்களும், உண்மையறிவும் தோன்றும். இந்த வானவருடைய துணைவேண்டிக் கண்வ ரிஷி பின்வரும் மந்திரத்தை ஓதுகிறார்.

மொழி பெயர்ப்பு.

1. இப்படி உங்களுடைய திறமையை மேலிருந்து தீபோல் வீசுவது யாருடைய வேள்வியால்? யாருடைய சூழ்ச்சியால்? யாரிடம் போகிறீர், உலகினை அசைப்பீர், யாரிடம்?

2. உம் ஆயுதங்கள் தாக்குவதில் உறுதியும் எதிர்ப் பதில் வலிமையும் பெறுக. தொழில் செய்யும் வீரம் உமக்கே யாகுக. மாயங்கள் செய்யும் மானுடனுக் கில்லை.

3. உறுதி கொண்டதை விசிறி யெறிகிறீர். கன முடைய பொருளைச் சுழல்விக்கிறீர். மண்ணில் மரங் களையும் குன்றுத் தொளைகளையும் ஊடுருவிச் செல்லு கிறீர்.

4 பகைவரைக் கடித்துண்பீர். உமக்கு வானத்தில் பகையில்லை. மண்ணிலு மில்லை. விரிவுடைய ஆற்றல் நுமக்கேயாம். ருத்ரரே அதனை யாரும் மீறலாமா!

5. மலைகளை நடுங்கச் செய்கிறார்கள். மரங்களைப் பிளந்து தள்ளுகிறார்கள். வாரீர், மருத்துக்களே, பித் தரைப்போல்; தேவரே, உமது முழுக்குலத்துடன் வருக.

6. புள்ளி மான்களைத் தேர்களில் பூட்டினீர். சிவப்புமான் தலைவனாக இழுக்கிறது. உமது வரவை மண்மக்களும் உற்றுக் கேட்டார், மனிதர் நடுங்கினர்.

7. ருத்ரன் மக்களே, விரிவின் பொருட்டு, உமது துணையை விரைவில் வேண்டுகிறோம். பழமைபோலே எமக்குத் துணை கொண்டுவருக ; அஞ்சி நிற்கும் கண வனை நாடி இங்கு வருக.

8. உம்மாலேனும், மனிதராலேனும், தூண்டப் பெற்றதாகி எம்மை அடிக்கவரும் பிசாசு யாதாயினும், அதற்கு ஆற்றலும் வலிமையும் உம்முடைய உதவி களும் இல்லாதபடி செய்க.

9. வேள்வி காப்பீர், கண்வனை முழுதும் காத்து

SB
4-13

விட்டீர்; உமது முழு வரங்களுடன் எம்மிடத்து வருக; மழைபிடத்து மின்னல்கள் கூடுவதுபோலே.

10. நன்ருகப் பிளப்பீர், முழு வன்மையும் கொண்டு வருகிறிர், உலகத்தை ஆட்டுவீர், மருத்துக் களேரிஷிகளின் கொடிய பகையின்மீதே அம்புபோலொரு பகை யினை வீசுக.

கருத்துரை.

உள்ளம் பழங்காடு போலாகி விட்டது. இருள் சேர்ந்து போயிற்று. நல்ல காற்றுப் புக வழியில்லை. புதரும் கிளையும் மிகுதியாகி இருளும், சேறும், நாற்றமுமாகி, நடக்கத் திரிய வழியில்லாமலிருக்கிறது. அப்போது தேவநாதனுகிய இந்திரனிடம் முறையிடுகின்ருேம். அவனுடைய தோழராகிய வேகசக்திகளை நாடுகிருேம். அந்த யோக சக்திகள் புயற்காற்றைப்போலே வந்து, உள்ளத்திலே சுத்தநிலையும், அமர வாழ்க்கையும் தந்து காக்கின்றன. ஓம் ததாஸ்து.

புயற்காற்றுத் தேவராகிய மருத்துக் களின் புகழ்ச்சி.

ரிக்வேதம் மண்டலம் 1, ஸூக்தம் 88.

(அ-1, அத்-6, வர்-14.)

மொழி பெயர்ப்பு.

(1) வாரீர் மருத்துக்களே,

மின்னல்களும், நல்ல பாட்டுக்களும், வேல்களும் நிரம்பியனவாய், (காற்றுக்) குதிரைகளைச் சிறகுபோல்

உடையனவாகிய தேர்களின் மீதேறி வருக. நல்ல மாயைகளை யுடையீர்.

மிக்க வளமுடைய இன்பத்தைக்கொண்டு, எம்மிடத்தே பறவைகள்போல் வருக.

(2) தேர்களை விரைந்திழுக்கும் செவப்புக் குதிரைகளும், மாநிறமுடைய குதிரைகளுங் கொண்டு, அவர்கள் ஒளியுடன் வருகிறார்கள். (அவர்களில் ஒருவன்) அரிவாள் கொண்டிருக்கிறான். அவன் பொன்னொளி வீசுகிறான். தேருருளையினால் அவர்கள் பூமியை அடித்தனர்.

(3) (வானவரே நீங்கள்) உடம்பிலே, செல்வத்தின் பொருட்டு வாள் பூண்டிருக்கிறீர்கள். காட்டை மேலோங்கும்படி அசைப்பதுபோலே, எமதறிவையும் ஓங்கும்படி செய்க!

(மானுடரே), உங்கள் பொருட்டாக இந்த மருத்துக்கள் நன்கு பிறந்து மிகவும் ஊக்க முடையவராய், மலையை அசைக்கிறார்கள்.

(4) பருந்துகளே,

எமது நாட்கள் உம்மை ஒரு முறை சுற்றி வந்து, பிறகு எமதறிவினிடத்தேயும், எமது தெய்விகமான செய்கையினிடத்தேயும் மீண்டெய்தி விட்டன.

நல்ல பாட்டுக்களாலே வேள்வி செய்யும் கோதம ரிஷியின் கூட்டத்தார் தண்ணீர் குடிப்பதற்காகக் கிணற்றின் மேன்மூடியைத் திறந்துவிட்டனர்.

(5) மருத்துக்களே, உமக்காக, கோதமன் பாடிய இப்பாட்டுக்கு நிகர் வேறொன்று கண்டதில்லை. பொன்

னுருளைத் தேர்களில் இரும்புப் பற்களுடைய காட்டுப் பன்றிகளைப் போலே வரும் உம்மைக் கண்டு (கோதமன் இப்பாட்டைச் செய்தான்).

(6) தொண்டன் வாக்காதலால், உமக்கிணங்கிய இந்தப் பாட்டு உம்மை நோக்கி ஒலித்தெழுகின்றது. எம்மிடமிருந்து, சிரமமின்றி, இயற்கையின் படி இந்த வாக்குண்டாயிற்று.

விளக்கம்.

இந்த மந்திரம் பாடினவர் கோதம ரிஷி.

1. பழைய உலகத்தை மாற்றிப் புதிய உலகம் செய்வதும், பழைய காட்டை அழித்துப் புதிய காடு தோன்றுவிப்பதும், பழைய அறிவை நீக்கிப் புதிய அறிவு கொடுப்பதும், மருத்துக்களின் தொழில். அதனால் அவர்களுடைய தேர்களில் "மின்னலும், நல்ல பாட்டும், வேலும்" கொண்டு வருகிறார்கள். மின்னலாலும், வேலாலும் பழமையை அழித்து நல்ல பாட்டினால் புதுமை பிறக்கும்படி செய்கிறார்கள். மருத்துக்கள் "நல்ல மாயைகளை யுடையோர்." தேவ மாயையென்றும், அஸுர மாயையென்றும் இரண்டு வகையுண்டு. நல்ல மாயைகளாவன தேவ மாயைகள்.

2. மருத்துக்களிலே ஒருவன் "அறிவாள் கொண்டிருக்கிறான்." இவனுடம்பு பொன்னொளி வீசுகிறது. இவன் யார்? கணநாதன்போலும்.

3. மனிதர் பொருட்டாக மருத்துக்கள் "மலையை அசைக்கிறார்கள்." இந்த மலை அஞ்ஞானம், அஹங்காரம்.

4. நாட்கள் மருத்துக்களைச் சூழ்ந்து நம்மிடம்

திரும்பி வரும்போது மருத்துக்களை அழைத்து வருகின்றன. அதாவது நாம் பல நாளாக மருத்துக்களை வேண்டிச் செய்த தவம் பயனடைந்து விட்டது என்றருத்தம். கோதம ரிஷியின் கூட்டத்தார் "தண்ணீர் குடிப்பதற்காகக் கிணற்றின் மேல் மூடியைத் திறந்து விட்டனர்." அந்தக் கிணறு யாதெனில் அதுவே அமர வாழ்க்கை. அதில் ஊறிவரும் நீர் அமிர்தம். அந்தக் கிணற்றின்மேல் மூடியாவது ஆணவம் ஆணவத்தை நீக்கி அமிர்த பானம் செய்கிறோமென்பது பொருள். (பருந்துகளெள்றது மருத்துக்களை).

5. காட்டுப் பன்றிகள் மத்த நிலையும் வலிமையுங் காட்டுவன. அவற்றின் "இரும்புப் பற்கள்" பழைய காட்டைக் கிழித்துத் தள்ளும் பொருட்டேயாம். இங்ஙனம் மருத்துக்கள் வருவதை நேரே ஞான விழியால் கோதம ரிஷி கண்டு இப்பாட்டைப் பாடினராதலால் இதில் அனுபூதி ரஸம் காணப்படுகிறது. ஆதலால் "இந்தப் பாட்டுக்கு நிகர் வேறொன்று கண்டதில்லை" என்று ரிஷி சொல்லுகிறார்.

6. ஸ்வானுபூதியால் வெளிப்பட்ட பாட்டாகையால், யாதொரு சிரமமில்லாமல், ஊற்றிலிருந்து நீர் புறப்படுவது போல் இயற்கையிலே தோன்றுகிறது. கோதம ரிஷியின் வாக்கினால் உலகத்தாரின் அஞ்ஞானம் நாச மடைகிறது.

வேதம்.

வேத ரிஷிகள் காலத்தில் கோவில் கிடையாது; விக்ரஹாராதனை கிடையாது; சந்யாஸம் கிடையாது,

அத்வைத, த்வைத, விசிஷ்டாத்வைதப் பிரிவுகள் கிடையா; பக்தி மாத்திரந் தானுண்டு.

கோவிலும் மடமும் பௌத்தமதப் பழக்கத்தால் வெளி நாடுகளிலிருந்து நமக்குக் கிடைத்த பேறுக ளென்று சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். ஆனால் இப்போது ஹிந்துமதப் பயிற்சிகளுள்ளே கோவிலும் சிலையும் நெடுந்தூரம் ஆழ்ந்து போய்விட்டன. ஆத லால், இப்போது ஹிந்து மதத்திலிருந்து கோவிலைப் பிரிக்க முடியாது. கோவில்களுக்குள்ளே பரஸ்பரம் பொறுமையும், சண்டையு மில்லாத படி எல்லாக் கோவில்களும் ஸாக்ஷாத் ஸூர்யனாகவும், அக்னி குமார னாகவும், ருத்ரனாகவும், இந்த்ரனாகவும், வாயுவாகவும், விஷ்ணுவாகவும், வருணனாகவும் விளங்குகிற பர மாத்மாவின் கோவில்களென்றும், கோயில்களுக்குள் ளே கக்ஷி பேதங்கள் கிடையாவென்றும் பண்டித பா மரர்கள் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ப்ரக்ருதி (இயற்கைத் தோற்றம்; காணப்படுகிற உலகம்) விஷ்ணுவுடைய சரீரம். இதற்குள்ளே வ்யா பித்து நிற்கும் ஆத்மாவே விஷ்ணு. விஷ்ணுவைச் சிலையிலும் வணங்கலாம், மலையிலும் வணங்கலாம், தூணிலும், துரும்பிலும் வணங்கலாம், சிலைகளிலே வணங்குதல் ஒரு வகை யோகம். வேதரிஷிகள் இந்த விஷ்ணுவை, இந்த்ரனை, ஸூர்யனை, ருத்ரனை நேரா கக் கண்டு வணங்கினார்கள். உலகமே இவனுடைய உடம்பாதலால் அவர்கள் உலகத்தை வணங்கினர். அறிவுக்குள்ளே வானமும் ஸூர்யனு மிருப்பது

போலே வெளியுலகத்திலும் இருக்கின்றன. உள்ளும் புறமும் ஒன்று.

மற்றொரு முறை விளங்கச் சொல்லுகிறேன். புயற்காற்றடித்தது. வேதரிஷிகள் அதன் முன்னே போய் நின்றார்கள். ஆயிர மின்னல்கள் வாள் போலே வீசின. உலகம் குலுங்கிற்று. அண்டங்கள் இடிவது போலே சத்தம் கேட்டது. மேற்படி ரிஷிகள் பயப்படவில்லை. மந்திரங்களைப் பாடினார்கள். ருத்ரனுடைய உடம்பு தானே உலகம்? வாயுவே ருத்ரன். வாயுவினுடைய உடற்செய்கை தானே புயற்காற்று? இந்திரன் மின்னலையும் இடியையும் காட்டுகிறான். மேகங்கள் சிதறுகின்றன. பூமிக்குத் தண்ணீர் கிடைக்கிறது, இதில் பயத்துக் கிடமெங்கே? ரிஷி புயற்காற்றைத் துதிக்கிறார். பிறகு இரவு நீங்கி ஸூர்யோதயம் உண்டாகிறது. ஒளி தோன்றுகிறது. அதைப்பார்த்து நேரே கைகூப்பி ரிஷி மந்திரம் பாடுகிறார். பக்ஷிகள் பாடுகின்றன. பூக்கள் மலர்கின்றன. நீரும் காற்றும் சிரிக்கின்றன. இஃதத்தனையும் இயற்கை தெய்வத்தின் காட்சி இதை ரிஷி போற்றும்போது ப்ரத்யக்ஷ நாராயணனைப் போற்றுகிறார்.

வீட்டிலே நெருப்பு வளர்த்து அதிலே தெய்வத்தைக் கண்டு தொழும் வழக்கம் காலத்தில் மிகுதிப்பட்டது. பொதுவாக இயற்கை வணக்கம் வழக்கமில்லாமல் போனபிறகும் அக்நி பூஜையும், ஸூர்ய பூஜையும் இன்றுவரை நமக்குள்ளே மிஞ்சி நிற்கின்றன. ஸந்த்யா வந்தனாதிகளில் ஸூர்ய பூஜை நியதமாக

நடந்து வருகிறது. ஸர்வ வைதிக கிரியைகளும் ஹோமம் வளர்த்துப் பூஜை பண்ணாமல் நடப்பதில்லை.

ப்ரக்ருதியை நேரே தொழும் வழக்கம் மிகுதிப்பட்டால் வேதம் ஒளி பெறும்.

சரணாகதியே வழி.

வேதரிஷிகள் வேறு வழிகாட்டியதாக ஸம்ஹிதைகளிலே தெரியவில்லை.

குருவுக்கு மரியாதை செய்யவேண்டுமென்றும், பரமாத்மா ஒருவனுக்கே சரணாகதி தருமென்றும் என்னுடைய அபிப்ராயம்.

மனத்தைக் கட்டி ஆளுவதற்கு மந்திரத்தை உச்சரிப்பதே வழி. மந்திரத்தின் ஒலியை த்யானம் செய்வதில் பயன் கிடைக்குமென்று தோன்றவில்லை. அதன் பொருளை த்யானிக்கவேண்டும். பின் வரும் பாட்டில் பரம்பொருளாகிய நாராயணனுக்கு சக்தி நாமம் வழங்கப்படுகிறது.

பாட்டு.

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்,
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாமிவள்
பார்வைக்கு நேர் பெருந் தீ,
வஞ்சகமின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்தரெல்லாம்
தஞ்சமென் றேயுரைப்பீர்; அவள் பேர் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம். (1)
நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நலத்தை நமக்கிழைப்பாள்
அல்லது நீங்குமென்றே யுலகேழும்
அறைந்திடு வாய்முரசே!

சொல்லத் தகுந்த பொருளன்று காணிங்கு
சொல்லு மவர் தமையே,
அல்லல் கெடுத்தம ரர்க்கிணை யாக்கிடும்;
ஆம், சக்தி ஓம், சக்தி ஓம். (2)
நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பிவிட்டோம்
கும்பிட்டெந் நேரமும் சக்தியென்றாலுனைக்
கும்பிடுவேன் மனமே.
அம்புக்குந் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில்லாத படி
உம்பர்க்கு மிம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம். (3)
பொன்னைப் பொழிந்திடு மின்னை வளர்த்திடு
போற்றி யுனக்கிசைத்தோம்;
அன்னை பராசக்தி யென்றுரைத் தோந்தளை
யத்தனையுங் கலைத்தோம்;
சொன்னபடிக்கு நடந்திடுவாய், மன
மே தொழில் வேறில்லை காண்;
இன்னும தேயுரைப் போம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். (4)
வெள்ளை மலர்மிசை வேதக் கருட்பொரு
ளாகி விளங்கிடு வாய்,
தெள்ளு கலைத் தமிழ் வாணி யுனக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்
எள்ளத் தனை பொழுதும் பயனின்றி
யிராதென்ற னாவினிலே
வெள்ள மெனப் பொழிவாய் சக்தி வேல் சக்தி
வேல் சக்தி வேல் சக்தி வேல். (5)

[குறிப்பு:— தனத தனத தனத தனத
தனத தனத தாம்.
என்று தாளம் போட்டுக்கொண்டு மேற்படி பாட்டை இஷ்டமான ராகத்தில் பாடலாம்].